# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/18 - 2023 ඔක්තෝබර් මස 04 වැනි බදාදා - 2023.10.04

2352/18 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DIVNA/LAD/LA/ACQUI/4/15.

காணி அமைச்சின் இல.: 4-3/9/2018//A/484.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 1076, தம்பகிரிகம மேற்கு கிராம அலுவலர் பிரிவில், திகன்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2022.12.30 ஆம் திகதி அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இல. 219, பிற்சேர்க்கை இல. 10, தாள் இல. 10 கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 346, 347 எனக் காட்டப் பட்ட 'கொவுல்வெவ கொவிபல' எனும் காணியின் சுமார் 2.0233 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரங்கள்:

**01. துண்டு இல. 346**

காணியின் பெயர் : கொவுல்வெவ கொவிபல; உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: தேசிய கால்நடை அபிவிருத்தி சபை; விஸ்தீரணம் : 1.9216 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நாரம்மல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ.பி.சி.என். பதிரண,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
நாரம்மல,
2023, செத்தெம்பர்.

EOG 10 - 0020

---

திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: THI/LND/L2/ACQVI/147.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/12/2018/WS/257.

திஹகொட பிரதேச செயலாளர் துமின்கூ ஹேவாகே உதயான்கனி சந்தமாலி ஆகிய நான், மாத்தறை IVஆவது கட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் கல்கெடிய நிலக்கீழ் நீர்த்தேக்கத்தையும் நிலையப் பொறுப்பாளருக்குரிய உத்தியோகபூர்வ விடுதியையும் நிர்மாணிப்பதற்காக காணிகளை எடுத்துக்கொள்வதன் நிமித்தம் வெளியிடப்பட்டுள்ள 2022.11.25 ஆந் திகதிய 2307/64 இலக்கத்தையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான வர்த்தமானி அறிவித்தலின் திருத்தப் பத்திர உரித்தினை பரீட்சித்துப் பார்க்கும் திகதி 2023.11.06 ஆவதுடன், அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதி 2023.10.23 எனவும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

டீ.எச்.யூ. சந்தமாலி,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
திஹகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட,
2023, செத்தெம்பர் 23.

EOG 10 - 0021